எம்.சி.ஓ.பி எண்: 5336/2022 தேதி: 07.04.2026

மசா. : 1

பெயர் : தாண்டவராயன்

த/பெ. : வெள்ளைச்சாமி

வயது : 57

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 11 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த இடத்தில் நான் இல்லை. காவல் நிலையத்தில் புகார் நான் கொடுத்தேன். என் மகன் நின்றுகொண்டிருந்த வாகனத்தில் பின்னால் இடித்து விபத்து ஏற்பட்டது. என் மகன் தலையில் அடிப்பட்டு இறந்தார் என்றால் சரி. அவர் தலைக்கவசம்அணிந்திருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் அவர் தலைக்கவசம் அணிந்திருந்தார். அவர் தலைக்கவசம் அணிந்திருந்தாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மசாஆ 5 ஆவணம் இந்த வழக்கிற்காக தாயரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. தொழில், வருமானம் காட்டும் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நின்றுகொண்டிருந்த லாாி ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய மகனின் அஜாக்கிருதையால் நடைபெற்றுள்ள காரணத்தால் 2ம் எதிா்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சாியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோாியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சாியல்ல.

X

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.